# தமது 4 கோரிக்கைகளை வலியுறுத்தவே புலிகள் தாக்கினர்


விலை ரூபா 5.00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 8 இதழ் 76
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21 - 4 - 1995


## ராஜதந்திரிகள் கருத்து

(கொழும்பு)

திருமலையில் மேற்கொண்ட தாக்குதல் தமது 4 கோரிக்கைகளை அரசு மேலும் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று காட்டுவதற்காகவே புலிகள் மேற்கொண்டார்கள் என்று வெளிநாட்டு ராஜதந்திரிகள் கருதுகிறார்கள்.

அதேசமயம் அரசும் புலிகளுடன் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க முடியும் என்ற நம்பிக்கையை இழந்து

(6-ம் பக்கம் பார்க்க)

### திருமலை தாக்குதலில்

## 14 படையினர் பலி

### லேக்ஹவுஸ் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

திருமலையில் இடம்பெற்ற சம்பவத்தில் 14 கடற்படையினர் கொல்லப்பட்டதாக 'லேக்ஹவுஸ்' பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தவேளையில் இத்தாக்குதலின்போது கடற்படையில் முக்கிய அதிகாரிகளும் முன்னணி கடற்படை சிப்பாய்களும் கொல்லப்பட்டதாக கடற்படை தலைமையகம் ஏற்கனவே அறிவித்தமை தெரிந்ததே. க-இ

### சமாதான நம்பிக்கை உருவாக இடமுண்டு

# திருமலை அதிரடி இல. அரசுக்கான

# புலிகளின் அடையாளத் தாக்கு

## திலகர் பி.பி.ஸி. பேட்டியில் தெரிவிப்பு

[லண்டன்]

திருகோணமலை துறைமுகத்தில் இருகடற்படைக்கப்பல்கள் விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்டசம்பவமானது ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு விடுதலைப்புலிகள் கொடுத்த முதலாவதும், தெளிவானதும், உறுதியானதுமான அடையாளத் தாக்குதலாகும். ஸ்ரீலங்கா அரசாங்கம் சாதகமான - நேர்தன்மையுள்ள முடிவுகளை நகர்வுகளை மேற்கொண்டால் போர் பற்றிய நம்பகத்தன்மைக்குப் பதிலாக சமாதானம் பற்றிய நம்பிக்கை உருவாக இடமிருக்கிறது. விடுதலைப் புலிகளின் சர்வதேச தொடர்பாளர் திரு. லோறன்ஸ் திலகர் பி. பி. ஸி. யின் உலகசேவைக்கு நேற்று வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையையோ தமிழீழ தேசியத் தலைவரின் காலக்கெடுவையோ உரிய அக்கறையுடன் சீர்தூக்கிப் பார்க்கவில்லை.

அரசாங்கம் உரிய கவனமும் அக்கறையும் கொள்ளும்

(6-ம் பக்கம் பார்க்க)

## 3-ம் கட்ட ஈழப்போர் தொடங்கிவிட்டது

### ஹரி குணதிலக

(லண்டன்)

மூன்றும் கட்ட ஈழப்போர் தொடங்கிவிட்டதாக இலங்கை விமானப்படை முன்னாள் தளபதி ஹரிகுணதிலகா தெரிவித்துள்ளார்.

பி.பி.சி உலக சேவைக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

சமாதானம் குறித்த விடுதலை புலிகளின் கோரிக்கைகள் அரசாங்கத்தால் வழங்கப்படக்கூடிய நிலை உள்ளதா எனக் கேட்கப்பட்டபோது அவ்வாறான நிலை இல்லை என அவர் மறுக்கவில்லை. ஆனால் அதுபற்றி தாம் சந்தேகிப்ப

(6ம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சு பற்றி அரசு புலிகளுக்கு விரைவில் கடிதம்!

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் பற்றி அரசு விரைவில் விடுதலைப்புலிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்ப இருப்பதாக கொழும்பில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையான ''ஒப்சேவர்'' நேற்று செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் விடுதலைப்

(6ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பலியான படையினர் விபரம்

(கொழும்பு)

திருமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடற்படை கப்பல்கள் தகர்ப்பில் பலியான படையினரின் பெயர் விபரங்களை கடற்படைத் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ளது

பொறியியலாளர்களான பெனவிலோய, எம். ஆர். டபிள்யூ. எதிரிசிங்க, ஏ.எம். ஜி. விக்கிரமரத்ன (கனேகெல), ஜே. எம், ஆர். யு, பி. ஜயசேகர (கண்டி), மற்றும் முன்னணி கடற்படையினரான எச். கே. நிமால், பி. ஏ. நிலாந்த (வெலிமடை) ஆகியோரும் சாதாரண கடற்படையினரான கே ஏ. பி.

(6ம் பக்கம் பார்க்க)

### பெண் கடற்புலி

## கப்டன் சாந்தாவின் நினைவுக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

திருமலைத துறைமுகத்தினுள் புகுந்து எதிரியின் கடற்கலங்களை உடைத்தெறிந்து வீரவரலாறு படைத்த கடற்கரும்புலிகளில் கப்டன்சாந்தா (சிவசுப்பிரமணியம் விஜய தேவி 7ம் வட்டாரம், புஙகுடுதீவு - தற்போதைய முகவரி மின்சார நிலையம் சுன்னாகம்) வின் திருவுருவப்படம் இன்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்திற்கு இறுதி வீரவணக்கத்திற்காக கொடுக்கப்படும்.

நாளை காலை 9 மணிக்கு சகல அணிவகுப்பு மரியாதைகளுடன் இவரது திருவுருவப் படம் இவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு

(6ம் பக்கம் பார்க்க)

## மீனவர்களை படையினர் அச்சுறுத்தி கலைத்தனர்

(யாழ்ப்பாணம்)

பூநகரி, கல்முனைக் கடற்கரைகளில் மீன் மிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து கலைத்து விட்டதாக அங்கிருந்து தப்பி வந்த மீனவர்களில் ஒருவர் தெரிவித்தார்,

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; பூநகரி, கல்முனைக் கடற்கரைகளில் கடல் அட்டை பிடிப்பதற்காக நாம் செல்வது வழக்கம், சில நாட்களில் நாம் இரவு முழுவதும் தங்கியிருந்து தொழில் செய்வதுமுண்டு. நேற்று முன்தினம் அரசாங்கம் திடீரென்று கடல் தடைச் சட்டத்தை அமுல்படுத்தியது எமக்குத் தெரியாது.

(6ம் பக்கம் பார்க்க)

### பலாலி - ஆனையிறவில்

## புலிகள் தாக்குதல்

### சிப்பாய்பலி; மூவர் காயம்

(கொழும்பு)

பலாலி, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி ஆகிய இராணுவ முகாம்கள் மீது விடுதலை புலிகள் நேற்று தாக்குதல் மேற்கொண்டதில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியானதாகவும்

(6ம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகளுக்கு அமெரிக்கா வலியுறுத்து

(நியூயோர்க்)

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் சமாதான முயற்சியை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை அமெரிக்க வெளிவிவகார திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

இது விடயம் தொடர்பாக அமெரிக்க வெளிவிவகார திணைக்களம் மேலும் தெரிவிக்

(6-ம் பக்கம் பார்க்க)

## கடமைக்கு சமூகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளக வைத்திய பயிலுனராக யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்ற விருப்பம் தெரிவித்தவர்கள் உடனடியாக கடமைக்குச் சமூகமளிக்குமாறு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்,

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய் கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராச ரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப் பாணம். (சி-1420)

### தவறிவிட்டது

நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் 19-04-95ல் இரண்டு பிர யாணப் பைகள் தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் யாழ் மரியன்னைப் பேராலய பங்குதந்தையிடம் ஒப்படைக் கவும். சன்மானம் வழங்கப் படும். (சி-1462)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# கிர ம உத்தியோகத்தர்கள் நியமனம் வழங்க கோரிக்கை

(திருநெல்வேலி)

கிராம உத்தியோகத்தர் நிய மனம் குறித்து ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்கவிற்கு யாழ் அரச அதிபர்ஊடாக மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட் டுள்ளது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

''யாழ்ப்பாண மாவட்டத் திற்குரிய கிராம உத்தியோ கத்தர் தெரிவிற்கான போட் டிப் பரீட்சை 1992ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடை பெற்றது. இப்பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் 7000 பேர் தோற்றினர், பின்னர், சித்தியெய்திய 196 பேரது பெயர்ப் பட்டியல் 1992-12-22 அன்று வெளியாகியது இவ் வாறு போட்டிப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கு 1993-03-03 அன்று நேர்முகப் பரீட்சை யாழ் செயலகத்தில் மாகாணசபை அதிகாரிகளி னால நடாத்தப்பெற்றது.

பின்னர் 1994-08-01ம் திகதியிலிருந்து இவர்களில் ஒரு பகுதியினருக்கு நியமனம் வழங்கபபட்டுவருகின்றது ஏனையோருக்கு இன்னும் நிய மனம் வழங்கப்படவில்லை. யாழ் மாவட்டத்தில்தற்போது பல வெற்றிடங்கள் உள்ளன.

1995-04-01ம் திகதிமுதல் தற்போது 1989ம் ஆண்டுநிய மனம் பெற்ற கிராம உத்தி யோகத்தர்களை விவசாய விரி வாக்க உத்தியோகத்தர்களாக வும்நியமனம்பெற்ற அனைவரை யும் அவர்களின் முன்னைய பதவிகளை வகிக்குமாறு இவர் களுக்கு மத்திய அரசினால் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள் ளது.

எனவே யாழ். மாவட்டத்தி லுள்ள அனேக வீதத்திற்கு மேற்பட்ட கிராம உத்தியோ கத்தர்கள் தமது முன்னைய பதவிகளுக்குச் செல்வர். பல வெற்றிடங்கள் ஏற்படும். இவ் வெற்றிடங்களுக்கு யாழ்ப்பா ணத்தில் தரம் 11 கிராம உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சையில் தெரிவான மிகுதி யான நியமனம் பெறுதிருப் போருக்கு நியமனம் வழங்கு மாறு கேட்டுக்கொள்கின்றோம்'' 157 ரி

# தமிழ்மொழி திறன் போட்டி நடத்தப்படும்

(கொழும்புத்துறை)

யாழ். கல்வித் திணைக்கள மாவட்ட அமைப்புக் குழுவி னால் தமிழ் மொழி கலைத் திறன் போட்டிகள் இம்முறை நடாத்தப்படவுள்ளதாக சகல பாடசாலை அதிபர்களுக்கும் அமைப்புக் குழுச் செயலாளர் திரு. எஸ் சிதம்பரநாதன் அறிவித்துள்ளார்.

பாடசாலைகள வருப்பு ரீதி யாக இப் போட்டியை நடாத் தியபின்னர் கோட்ட நிலையில் இப்போட்டியை நடாத்த விண்ணப்பிக்கும் படியும் கோட்ட நிலைப் போட்டிகள் மே மாதம் 26ம் நாளுக்கு முன்னர் நடாத்தப்பட வுள் ளது எனவும் அதனைத் தொடர்ந்து வலய நிலைப் போட்டிகள் ஜூன் 2ம், 3ம், நாட்களிலும் தொடர்ந்து மாவட்டப போட்டிகள் ஜூன் 16, 17, 19 நாட்களிலும்நடை பெறும் எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

இசை, நடனம், நாடகம், மொழித்திறன் ஆகிய விடயங் களில் இப்போட்டிகள் நடை பெறும். 1995ம் ஆண்டில் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் மட்டுமே இப்போட்டியில் பங்குபற்ற லாம்.

போட்டிகள் ஐந்து பிரிவுக ளாக நடைபெறும் முதலாம் பிரிவு ஆண்டு 4, 5 மாணவர்க ளுக்கும், இரண்டாம் பிரிவு ஆண்டு 6, 7, 8 மாணவர்களு க்கும், மூன்றும் பிரிவு 9, 10, 11 மாணவர்களுக்கும், நான் காம் பிரிவு ஆண்டு 11 13 மாணவர்களுக்கும், ஐந்தாம் பிரிவு திறந்த போட்டியாக ஆண்டுக் கட்டுப்பாடில்லாது நடாத்தப்படும். 154

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—04—21**

வெள்ளி இரவு

08-02 கலைமஞ்சரி - நிகழ்ச்சி யில் முதலில் அறிமுகம். அறிமுகமாவது பிரம் மஸ்ரீ அ. நா. சோமஸ் கந்தசர்மா எழுதிய ''இருபதாம் நூற்றாண் டின் இசை முன்னோடி கள்'' எனும் நூல். அறிமுகத்தைத் தொடர்ந்து சிறுகதை- சு. சாரங்கா எழுதிய ''விரையும் தடங்கள்'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை- வே. தபேந்திரன் எழு திய ''காலப்பெரு வெளியில் காலாவதி யாகப் பெருவடிவம்''.

08-25 கணப்பொழுது- போராளி குலேந்திரன் எழுதிய ''வீரவேங்கை விஸ்வம்''

08-30 செய்திகள்

08-40 சமகாலப் பார்வை

08-50 ஏர் முனை ''எமது உற் பத்தியில் வெள்ளைச் சம்பா''

**1995—04—22**

சனி காலை

07-02 மாவீரவணக்கம்

07-15 நீங்கள் கேட்டவை

07-30 செய்திகள்

07-35 பத்திரிகைச் செய்திகள்

07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—04—21**

வெள்ளி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்

05-02 எழுச்சிக்கீதம்

05-10 புதியவை

05-15 கணநேரக் காவியங்கள்

05-30 மண்ணின் குரல்

05-40 நேயர் கடிதங்கள்

05-45 வெற்றிச் சுவடுகள்

06-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்

06-02 நாடகம்

06-15 விளையாட்டுச் செய்திகள்

06-20 என்தெரிவு

06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையி னர் தொண்டமனாறு ஸ்ரீ செல் வச் சந்நிதி முருகன் ஆலயத் தில் நடாத்திவரும் வாராந்தக் கருத்தரங்கில் இன்று 21ம் திகதி மாலை 3 மணியளவில் வல்வை சிவகுருவித்தியாசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் பேச்சும், பண்ணிசை நிகழ்ச்சி யும் நடைபெறு அறிமுக உரையை அதிபர் த. தவேந் திரராசா வழங்குகின்றார். -ம

### நீர்இறைக்கும் இயந்திரங்கள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட வவசாய உற்பத்தி. விற்பனவு நுகர்ச்சி கூட்டுறவுச்சங்கங்களின் சமா ஜத்தினால் அண்மையில் சப் பல் மூலம் கொண்டு வரப் பட்ட நீர்இறைக்கும் இயந் திரங்கள் கொழும்பு சில்லறை விலைக்கே இங்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

யாழ் மாவட்டத்திலுள்ள அங்கத்துவ பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக இந்த நீர் இறைக்கும் இயந் திரங்கள் விற்பனை செய்யப் பட்டு வருவதாக சமாஜத்தின் தலைவர் திரு ச செல்வரத் தினம் தெரிவித்தார். 72

### எள் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் நல்லெண் ணெய்த் தேவையை நிறைவு செய்யும் வகையில் நல்லெண் ணெய் உற்பத்தியை மேற் கொள்ளுமுகமாக இம்முறை பெருமளவான எள் தானியத் தைக் கொள்வனவு செய்ய தமிழீழ மேம்பாட்டுநிறுவனத் தின் கைத்தொழிற்பகுதி நட வடிக்கை எடுத்துள்ளது.

எனவே தற்போதைய எள் விதைப்புக் காலத்தில் நிலங் களைத் தரிசாக விடாது எள் உற்பத்தியை மேற்கொள்ளு மாறும், இதற்கான சகல உதவிகளையும் பசுமை வேளாண் சேவை நிலையத்துக் கூடாகப் பெற்றுக்கொள்ள லாமெனவும் அறிவிக்கப்படு கின்றது.

# வலு விழந்தவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

''வாழ்க்கையில் வலுவிழந்த வர்களும் மனிதர்களாக இச் சமூதாயத்தில் வாழவேண் டு என்கின்ற நல்ல நோக் கத்துடன் நோயாளர் நலன் புரிச் சங்கம் தனது பணிகளை மேற்கொண்டு வருகிறது. இநத வகையில் இச்சங்கம் வலுக்குறைந்தவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகை யில் உதவிகளை வழங்கி வரு கிறது.''

நோயாளர் நலன்புரிச்சங்க நடுவக பணியகத்தில் நடை பெற்ற வலுவிழந்தோருக் கான முச்சக்கர வண்டி அன்ப ளிப்புச் செய்யும் வைபவத் தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற் றிய யாழ் மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு பத்மநாதன் தனதுரையில் இவ்வாறு தெரி வித்தார்.

நோயாளர் நலன்புரிச் சங் கத் தலைவர் டாக்டர் சி. சிவ பாலன் தலைமையில் நடை பெற்ற இவ்விழாவில் திரு. பத்மநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வாழ்கையில் வலு இழந்த வர்களும் எமது சமுதாயத்தில் ஒரு அங்கத்தவர்களே. அவர் களுக்கு மறுவாழ்வளித்து சமு தாயத்தில் அவர்களும் மனி தர்களாக வாழவேண்டும். அவர்களுக்கு ஏற்ற வகையில் தொழில வசதிகளை ஏற்படுத் திக் கொடுப்பதன் மூலம் எமது சமுதாயத்தில் அவர்களும் மனிதர்களாக வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுப்பதே நோயாளர் நன்புரிச் சங்கத தின நோக்காகும். போர்க் காலசூழ்நிலையால் இன்று எத் தனையோ மக்கள் வலு விழந்துள்ளார்கள். இவர் களை எல்லாம் இனங்கண்டு இவர்களுக்கு மறுவாழ்வு அளிசகவேண்டும் என்றும் தெரிவித்தார்.

வலுஇழந்தவர்களான மல் லாகத்தைச் சேர்ந்த திரு. மார்க்கண்டு இராசையா, ஏழாலையைச் சேர்ந்த திரு. கனகசபை சுரேசன் ஆகியோ ருக்கு சிறப்பு விருந்தினர் திரு. பத்மநாதன் முச்சக்கர வண்டிகளை அன்பளிப்புச் செய்துவைத்தார். -162-ரி

# வளங்களைப் பற்றிய தகவல் சேகரிப்பு

(உடுவில்)

ஒரு நாட்டின் முன்னேற்றத் துக்கான திட்டங்களை வகுக்க வும் செயல்படுத்தவும் அந்த நாட்டில் காணப்படும் வளங் களைச் பற்றிய சரியான தக வல்சள் கண்டறியப்படுதல் அவசியமாகும் என்ற நோக் கத்துடன் தமிழீழத்தில் காணப்படும் வளங்கள் பற்றிய புள்ளிவிபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளிவிபரக் கிளை யினர் திரட்டி வருகின்றனர்.

வளங்களைப் பற்றி மிகவும் துல்லியமாக தகவல்களை சேக ரித்து தொகுப்பதன் மூலம் வளங்களைப் பற்றிய முழு விப ரங்களையும் அறிந்துகொள்ள முடியும்.

புள்ளி விபரத்தரவுகள் தேவைப் டுவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளிவிபரக் கிளை யுடன் தொடர்புகொண்டு தமக்குத் தேவையான தரவு களை பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. -109

# கூட்டுறவு சங்கங்களுக்கு மக்கள்வங்கி நிதிஉதவி

(ஆனைப்பந்தி)

யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மக் கள் வங்கியின் யாழ். பிர தேச தலைமை அலுவலகம் நிதியுதவி அளிக்க முன் வந் துள்ளதாக தெரிய வருகின் றது

யாழ் அரச அதிபர் கூட்டு றவு மாகாணசபைகள் சுதேச வைத்திய அமைச்சின் செய லாளருக்கு இதுபற்றி கோரி க்கை விடுத்தார் இதற் கிணங்கவழங்கப்படவுள்ள இந் நிதியுதவியை பெறவிரும்பும் சங்கங்கள் தத்தமது பகுதி உதவி அரசாங்க அதிபர்- பிர தேச செயலர் ஊடாக விண் ணப்பங்களை அனுப்பிவைக்கு மாறு யாழ். அரச அதிபர் கோரியுள்ளதாகவும் மேலும் தெரியவருக்கிறது. 101

# இல்ல விளையாட்டு போட்டி முடிவுகள்

(ஆனைப்பந்தி)

அண்மையில் நடைபெற்ற சில பாடசாலைகளின் இல்ல விளையாட்டுப்போட்டி முடிவு கள் வருமாறு:

யாழ் கன்னியர் மடம் மகா வித்தியாலயம்; 1ம் இடம் ஜோசப் இல்லம் (சிவப்பு [222 புள்ளிகள்] 2ம் இடம்: திரேசா இல்லம் (மஞ்சள்), அன்ரன் இல்லம் (பச்சை) (தலா 171 புள்ளிகள்)

யாழ் இந்து மகளிர் கல் லூ : 1ம் இடம் ச ஸ்வதி இல்லம் (161 புள்ளிகள்) 2ம் இடம்: அருந்ததி இல்லம், ரதி இல்லம் (தலா119 புள்ளிகள்) 3ம் இடம் பார்வதி இல்லம் (102 புள்ளிகள்), 4ம் இடம் லக்ஷ்மி இல்லம் (94 புள்ளி கள்)

புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்: 1ம் இடம்: இலட்சுமி இல்லம் (சிவப்பு) (220 புள்ளிகள்) 2ம் இடம் சரஸ்வதி இல்லம் (பச்சை) (181 புள்ளிகள்) 3ம் இடம்: பார்வதி இல்லம் (நீலம்) (156 புள்ளிகள்,

புங்குடுதீவு மகா வித்தியால யம: 1ம் இடம் பச்சை இல் லம் (366 புள்ளிகள்), 2ம் இடம் மஞ்சள் இல்லம் (334 புள்ளிகள்) 3ம் இடம் சிவப்பு இல்லம் (314 புள்ளிகள்)

யாழ் புனித மரியாள் வித் தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிக்கான முடிவுகள்-

ஆரம்ப பிரிவு

1-ம் இடம். சென் அன்ர னீஸ் இல்லம் பச்சை 150½ புள் ளிகள் 2-ம் இடம் சென். ஜோசப் இல்லம் - மஞ்சள் 126½ புள்ளிகள், 3-ம் இடம் சென் யூட் இல்லம்- ஊதா 94 புள்ளிகள், 4-ம் இடம் சென் திரேசா இல்லம் சிவப்பு 91 புள்ளிகள்

மேற் பிரிவு

1ம் இடம் சென் யூட் இல் லம் 244 புள்ளிகள், 2ம் இடம் சென். ஜோசப் இல்லம் 234½ புள்ளிகள், 3ம் இடம் சென் அன்ரனிஸ் இல்ல - 211 புள்ளிகள் 4ம் இ சென் திரேசா இல்லம் 148½ புள்ளிகள் 101

நூலகம்.



### மணிவாக்கு

"கூட்டாளிகளிடையே பேதம் உண்டாக்குதல், நண்பர்களைச் சம்பாதித்தல், பகைவரிடம் உறவாடி வெல்லுதல். பொருள் அழிவு, ஆராய்ச்சி இல்லாமல் செயலில் இறங்குதல், ஆகிய ஐந்தும் பஞ்ச தந்திரங்கள் ஆகும்.

— நீதிநெறி

# கிழக்கில் பல பகுதிகளுக்கும் பெருமளவு படையினர் விரைவு

[மட்டக்களப்பு[

கிழக்கு மாகாணத்தில் எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருவதுடன் மேலதிக படையினர் அப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

திருமலை கடற்படைத் தளத்தில் இடம்பெற்ற தாக்குதலை அடுத்து பாதுகாப்பு அமைச்சு இந்த நடவடிக்கைகளை உடனடியாகமேற்கொண்டுள்ளது: நிலைமை மோசமானல் எல்லைப்புறக் கிராமங்கள் தாக்குதலுக்கு இலக்காகலாமென்ற அச்சத்திலேயே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்கில் சகல பகுதிகளிலும் உள்ள எல்லைப்புறக் கிராமங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இராணுவ தலைமைப்பீடத்திற்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து கிழக்கின் பல பகுதிகளுக்கும் இராணுவத்தினர் அனுப்பப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் காட்டுப்பகுதிகளில் முகாமிட்டுள்ள ஆயிரக்கணக்கான படையினர் அங்கிருந்து நகர்ப்புறப்பகுதிகளுக்கும் எல்லைப்பகுதிகளுக்கும் அனுப்பப்படவுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கிழக்கில் படையினர் நேற்று முதல் தமது வழமையான வீதிச் சோதனைகளை ஆரம்பித்துள்ளதாக அரச செய்திகள் நேற்றுக்காலை தெரிவித்தன. வீதித் தடைகள் போடப்பட்டு இந்தச் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் படையினரின் முகாம் பகுதிக்குள் பிரவேசிக்கும் எவரையும் கண்டதும் சுடுமாறும் வடக்கு - கிழக்கில படையினருக்கு அவசர உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சி

## நமது நோக்கு

### நிலைத்து நிற்குமா?

1994 — பிற்பகுதி — ருஷ்யப் படைகள் ஜேர்மனி, பால்டிக் பகுதிகளிலிருந்து முற்றாக விலகிய சம்பவம் வரலாற்று முக்கியத்துவமானது.

ஏனெனில் — அமெரிக்க வல்லரசுக்குச் சவாலாக இருந்த ருஷ்யா இந்த நிலைக்கு வரும் என யாரும் எதிர்பார்க்கவில்லை.

''வரலாற்றில் அங்கு பதிக்கப்படும் அபூர்வமான வேளை இது!', என்றுதான் ருஷ்ய வரலாற்று ஆசிரியர் லியுகோபலேவ் இச் சம்பவம் பற்றிக் குறிப்பிட்டார்.

ஒருகாலத்தில் - எஸ்தோனியா, லத்வியா, லிதுவேனியா ஆகிய பகுதிகளில் சுமார் இரண்டு லட்சம் ருஷ்யப் படைகள் நிலைகொண்டிருந்தன.

அது மாத்திரமா? போலந்து, செக்கோசிலாவாக்கியா ஆகிய நாடுகள் ருஷ்யக் கொள்கையோடு முரண்பட்டபோது, டாங்கிகள் சகிதம் ருஷ்யப் படைகள் நுழைந்தன. ஆனல் அவை அங்கு நிலைத்துநிற்க முடிந்ததா?

வலிமை அதிகரித்தபோது மக்களை அடக்கி ஒடுக்கி படைகளை வைத்திருக்கலாம்.

ஆனல் - மக்கள் எழுச்சிகொண்டு வீரகாவியம் படைத்தால், ஆக்கிரமிப்புப் படைகள் விலகாமல் நிலைத்துநிற்க முடியுமா?

1940முதல் நிலைகொண்டிருந்த ருஷ்யப் படைகள் விலகியபோது மக்கள் என்ன செய்தார்கள்?

இவ்வளவு காலமும் எமக்குப் பாதுகாப்புத் தந்த படையினர் எனக்கூறி நன்றிக் கடனேடு வழி அனுப்பினர்களா?

அந்தப் படையினரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக டோம் தேவாலயத்தில் பிரார்த்தனை செய்திருக்கிறார்கள்.

அதுபோல — ருஷ்யப் படை லிதுவேனியாலிருந்து விலகியபோது அந்த நாட்டு ஜனதிபதி டெனட் என்ன கூறினர்?

''எங்கள் வரலாற்றிலே மிகுதியாகக் கவலை தந்த ஒரு அத்தியாயம் ஒன்று இன்றுடன் முடிவடைந்தது!

இங்கு - கவலை தரும் அத்தியாயம் ஒன்று முடிவுக்கு வரப் போராளிகள் தியாகம் வழிவகுக்கும் என நம்புகிறேம்!

## பலதும் பத்தும்

### எண்ணமே வலிமை!

''எதை எண்ணுகிறேமோ அதுவாகிறேம்!'' என்பது வேதத்தின் முடிபு. நல்ல எண்ணங்கள் நன்மையையும், தீய எண்ணங்கள் தீமையையும் தான் விளைவிக்கும் என்பதுதானே அனுபவம்?

சோக பாத்திரங்களிலேயே நடித்துப் புகழ்பெற்ருராம் ஒரு மழையாள நடிகை. நடிப்புக்காகவே சோக சிந்தனை வெளிக்காட்டியவருக்கு என்ன நடந்தது? தான் அடிக்கடி சோர்ந்து போவதாகக் கூறித் தனது கதாபாத்திரங்களை மாற்றிக்கொண்டாராம்!

''நான் சோர்ந்து போனேன்'' என்ற பாடல் அமெரிக்காவில் பிரபலமாக இருந்தது. ஆனல் அதை அனுபவித்துப் பாடிய பாடகியோ களைத்து, உடல் சோர்ந்து உள்ளமும் ஒய்ந்துபோய் விட்டது. பின்பின் அப்பாடலைப் பாடுவதையே நிறுத்திவிட்டார்.

''எல்லாம்வல்ல இறைவா போற்றி!'' என்று துணிவோடு சிந்தித்தால் வல்லமை வரும்; வாழ்வில் வெற்றி வரும்!

— மயூரன்

## இராசி பலன்

21—04—1995

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு சித்திரை—08)

ஸப்தமி பின்னிரவு 2-33 வரை. பூராடம் மாலை 6-14 வரை சித்தயோகம் இராகு காலம் காலை 10-31 முதல் 12-01 வரை, சுபவேளை காலை 6-01 முதல் 7-31 வரை.

மேஷம்; தொழில் மந்தம். வீண் விரயம், உடல் சோர்வு.

இடபம்: குடும்ப சிக்கல், வாக்குப்பகை, மனக்குமுறல்.

மிதுனம்: தொழில் லாபம், தாயார் அனுசரணை, பண வரவு.

கடகம்: கருத்து மோதல், அதிகாரிகள் உதவி, பயணம்.

சிங்கம்: கோபமுறல், தொழில் பகை, தெய்வீக செலவு.

கன்னி: அசுபசெய்தி, மாமனர் பகை, அலைச்சல்.

துலாம்: அறிஞர் சந்திப்பு. கடன் வரவு, பெரியோர் ஆசி.

விருச்சிகம்; விதண்டாவாதம், வைத்தியசெலவு, மனக் கவலை.

தனுசு: புதிய ஸ்தானம், கல்வியால் சிறப்பு, விருந்துண்ணல்.

மகரம்; பயனற்ற செயல். சகோதர வெறுப்பு, ஒதுங்கி போதல்.

கும்பம்: ஏமாற்ற உணர்வு, இனசன வரவு, வாக்கு வன்மை.

மீனம்: தேடியது கிடைத்தல், நற்பெயர், சமயோசித செயல்.

— ஜோஸ்யர்

திருமலையில் உயிரிழந்த

# 8 சிப்பாய்களின் சடலங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன

[கொழும்பு]

திருமலை துறைமுகப் பகுதியில் கடற் கரும்புலிகளால தகர்க்கப்பட்ட இரு பீரங்கிப் படகிலுமிருந்து உயிரிழந்த படையினரில் 8 சிப்பாய்களினதும் சடலங்கள் கொழும்பிற்கு விமான மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் உயிரிழந்த படையினரின் சடலங்கள் நேற்று முன்தினம் நண்பகலுக்குப் பின்பே கடற்படை சுழியோடிகளால் கடலிலிருந்து மீட்கப்பட்டது. இவர்களுக்கு அன்று மாலை கடற்படைத் தளத்தில் அஞ்சலி அணிவகுப்பு நடைபெற்றது.

இதையடுத்து உயிரிழந்தவர்களில் எண்மரின் சடலங்கள் தனித்தனி பெட்டிகளில் வைக்கப்பட்டு விஷேடவிமானமூலம் கொழும்பிற்கு நேற்று முன்தினமிரவு அனுப்பிவைக்கப்பட்டது. அச்சடலங்கள் நேற்று நண்பகல் வரை கொழும்பு ஜெயரத்ன மெரிட் சாலையில் வைக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் கடற்படைத் தலைமையகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து அவர்களது சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த கடற்படைச் சிப்பாய்களும் விஷேட விமானங்கள் மூலம் கொழும்பு இரத்மலானை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் கடற்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. -சி

★ பல்கலைக்கழகங்களில் நெருக்கடி

# சகல நிர்வாக பதவிகளையும் விரிவுரையாளர்கள் துறப்பர்

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா பதவிகளை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் நேற்று முதல் துறந்துள்ளனர். ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் தொழிற்சங்க நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பித்ததைத் தொடர்ந்தே அவர்கள் இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

சம்பள உயர்வு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை ஆரம்பித்துள்ள பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் தொழிற்சங்க சம்மேளனம் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு நேற்று 19 வரை காலக்கெடு விதித்திருந்தது.

அரசு இதனை நிறைவேற்றத் தவறியதை அடுத்தே தமது தொழிற்சங்க நடவடிக்கைகள் திட்டமிட்டபடி நேற்று முதல் ஆரம்பமாவதாக மேற்படி சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் கல்விசாரா பதவி வகிக்கும் அதாவது துணைவேந்தர், பீடாதிபதிகள் உட்பட நிர்வாகப் பதவிகளை வகிக்கும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் அந்தந்த பதவிகளிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளனர். (சி)

சிறிமாவின்

## ஆலோசகராக ரத்வத்தை

(கொழும்பு)

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆலோசகராக டாக்டர மக்கி ரத்வத்தை ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்;

அரசியலில் பழுத்த அனுபவம் உடையடாக்டர் ரதவத்தை அரசியல் வாதிகளை பல நன்கு அறிவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரதுவத்தை மற்றும் உபாலி பத்திரிகை நிறுவன இயக்குனர் சீவலி ரத்வத்தை ஆகியோரின் சகோதரர் எனபதும் திருமதி சிறிமாவின் ஒன்று விட்ட சகோதரன் என்பது குறிப்பிடத்தக்கது. ம.கி

### இலட்சார்ச்சனை விழா

(அரியாலை)

சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானத்துல் 19ம் திகதி புதன்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் இலட்சார்ச்சனை விழா ஆரம்பமாகியுள்ளது எதிர்வரும் 29ம் திகதி சனிக்கிழமையுடன் இலட்சார்ச்சனை விழா நிறைவு பெறுகின்றது உற்சவ நாட்களில் சமயச்சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. (59)

வெள்ளி விருந்து

## உண்மைப் பொருள் எது?

மெய்ப்பொருளை அறிவின் துணைகொண்டு அறிந்துவிடப் பெருநூல் வேதம் ஆராயத் தொடங்கியது.

நிலம் பிரமம் என்றது வேதம். அதில் வேதத்திற்கு ஐயப்பாடு எழுந்தது. அது பிரமம் அல்ல என்றது.

மீண்டும் ஆராயத்தலைப்பட்டது.

நீர்...? அதுவல்ல. தீ...அதுவல்ல...காற்று... அதுவல்ல. உடம்புதான் பிரமம். இல்லை, அதுவல்ல. உடம்பிலுள்ள வாய், கண், காது, மூக்கு...அதுவல்ல. மனம்? அது அல்ல. புத்தி...? அதுவல்ல. புத்தியின் மாறுபாடுகளாக இருக்குமோ? அது அல்ல.

மனம்? அது அல்ல. ஆன்மா. இல்லை. அதுவல்ல. வேதம் மெய்ப்பொருளை உணரமுடியாமல் நிலை தடுமாறியது.

வேதங்களை ஆராய்ந்தவர்கள், வேதம் அன்மையாகச் சொல்லும் பிரமம் 'வஞ்ச வெளி' என்ற முடிவுக்கு வந்தார்கள்.

வேதம் உறுதிப்படுத்த முயன்று கொண்டிருப்பதும் ஆராய்ந்தவர் 'வஞ்சவெளி' என்பதும் எதுவோ-அது.

மதுரைத் திருவீதியில்-பாதங்கள் நோவ வளையல் விலை பகருகிறது.

நான் பாணபத்திரன் ஆள் என்று விறகு சுமந்து திரிகிறது.

வைகை அணை கட்டச் செம்மனச் செல்வி அம்மையாரோடும் பிட்டினைக் கூலி கேட்கிறது!

ஈது என்னே அதிசயம்.

இந்தக் கருப்பொருளை அந்தப் பாடலாகப் பரஞ்சோதி முனிவர் தந்த திருவிளையாடற் புராணம் சாற்றும்.

பூதங்க ளல்ல பொறியல்ல
வேறு புலனல்ல வுள்ள
மதியின்
பேதங்க ளல்ல விவையின்றி
நின்ற பிறிதல்ல வென்று
பெருநூல்
வேதங்கி டந்து தடுமாறும்
வஞ்ச வெளியென்ப
கூடன் மறுகிற்
பாதங்க ளோவ வளைஇந்த
ஞதி பகர்வாரை யாயு
மவரே.

—சிவசண்முகவடிவேல்

உரிமைக் குரல் கொடுக்கும் தினம் தான் மே ஒன்று
உறுதியெடுக்கும் தினம்தான் உனக்கு இன்று.

# ஜே.வி.பியின் திட்டங்கள் பற்றி அறியமுடியாதுள்ளதாம்

(கொழும்பு)

தெற்கில் ஜே வி.பி. தனது உறுப்பினர்களை அதிகரிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. மேலும் ஜே. வி பியின எதிர்கால திட்டம் என்ன என்பது பற்றி எதுவும் தெரியவில்லை என 'சண்டே ஐலன்ட்' தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்; அண்மைக்கால வங்கிக் கொள்ளை குறித்தும் அதற்கு பயன்படுத்தப்பட்ட நவீன ரக ஆயுதங்கள் குறித்தும் தேசிய புலனாய்வுத்துறை அரசை எச்சரித்துள்ளது.

ஜே. வி. பி. மீண்டும் வன்முறைகளை நோக்கிச் செல்லும் சாத்தியமிருப்பதாக எழும் வதந்திகளை ஜே. வி. பி எம். பியான நிஹால்கலப்பத்தி மறுத்துள்ளார் 'நாங்கள் மீண்டும் வன்முறையில் ஈடுபடுவோம் என்றால் நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கு நான் ஏன் நுழைந்திருக்க வேண்டும் என்ற கேள்வியையும் நிஹால் கலப்பத்தி எழுப்பியுள்ளார். அரசு இளைஞர்களின் பிரச்னைகளை தீர்ப்பதில் ஆர்வம் காட்டவில்லை எனவும் குற்றம் சாட்டியதுடன் கட்சிக்கு ஆள் சேர்ப்பதும், பணம் சேர்ப்பதும் ஜனநாயக ரீதியான செயற்பாடே எனவும் தெரிவித்தார்.

முன்னைய ஐ. தே. க. ஆட்சிக்கும் தற்போதைய பொ. ச. மு. அரசுக்கும் இடையில் எதுவித வித்தியாசமுமில்லை என அண்மைக்காலமாக ஜே. வி. பியினர் தெற்கின் பல பகுதிகளிலும் தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜே. வி. பியினரின் நடவடிக்கை குறித்து புலனாய்வுத்துறை உன்னிப்பாக அவதானித்து வருவதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஒவ்வொரு வாரமும் இது குறித்து புலனாய்வுத்துறை அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்து வருகிறது.

ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் ரோகண விஜயவீராவின் காலத்தில் வெளியிடப்பட்ட 'விமுக்தி கீ' என்னும் ஒலிப்பதிவு நாடாவை மீண்டும் வெளியிட்டு வருகிறது. இதன் முதல் பாகம் விரைவில் விற்பனைக்கு வருமென தெரிவிக்கப்படுகிறது.

இந்த பாடல் ஒலிப்பதிவுக்கு தெற்கில் நல்ல வரவேற்புள்ளது. இதனால் அரசுக்கு இந்த விடயம் பெரும் தலையிடியாகவே உள்ளது. இந்நிலையால் ஜே.வி பி மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்தில் இறங்கினால் அதனை சமாளிக்கும் நிலையில் அரச படைகள் இருக்குமா என்பது கேள்விக்குறியாகவே இருப்பதாக மற்றொரு செய்தி கேள்வி எழுப்பியுள்ளது. (ஸி)

# விவசாயப் பொருள்கள் குமணவில் வந்தன

[ஆனைப்பந்தி]

சில தினங்களுக்கு முன் பருத்தித்துறை வந்தடைந்த குமண கப்பலில் யாழ்.மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்குரிய சுமார் 350 மெற்றிக் தொன் நுகர்ச்சிப் பொருட்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

அடுத்துவரவுள்ள கோமாரி கப்பலில் சைக்கிள் ரயர், ரியூப், நீர்இறைக்கும் இயந்திரங்கள், தட்டச்சு இயந்திரங்கள், என்பனவும் அவற்றின் உதிரிப்பாகங்களும் எடுத்து வரப்படவுள்ளதாகவும் மேற்படி சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. [101-சி]

மட்டுநகரில்

# சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கு

(கொழும்பு)

'சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கு ஒன்று விரைவில் மட்டுநகரில் நிறுவப்படும், என்று விளையாட்டு அமைச்சர் எச் பி. திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில உள்ள சுகதாச விளையாட்டு அரங்கில் உள்ள நவீன வசதிகளைப் போன்றும் இதே மாதிரி வடிவமைப்பிலும் மட்டு. நகரில் விளையாட்டு அரங்கு அமைக்கப்படும். ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியுடன் இந்த விளையாட்டு அரங்கு அமைக்கப்படும்.

கொழும்புக்கு வெளியே சர்வதேச தரத்திலான ஒரு விளையாட்டு அரங்கு அமைக்கப்படுவது இதுவே முதல் தடவை என்று விளையாட்டு அமைச்சர் மேலும் தெரிவித்தார், வி-ரி

# தமிழக மீனவர்களில் 58 பேர் கடலில்வைத்து கடத்தபட்டனர்

(சென்னை)

இராமேஸ்வரம் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களில் 58 பேர் இனந் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக தமிழக அரசு மத்திய அரசிடம் முறைப்பாடு செய்துள்ளது.

இது பற்றி தமிழக அரசு மேலும் தெரிவிக்கையில், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு, இராமேஸ்வரம் கடல் பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 58 பேரை இரு பாரிய படகுகளில் ஆயுதங்களுடன் வந்த சிலர் கடத்தியதுடன் மீனவர்களின் படகுகளையும் மீன்பிடிச் சாதனங்களையும் தம்முடன் எடுத்துச் சென்று விட்டதாகவும் இச் செயலில் ஈடுபட்டவர்களைக் கண்டு பிடித்து மீனவர்களையும் அவர்களின் படகுகளையும். மீன்பிடி சாதனங்களையும் உடன் மீட்டுத்தரும்படி, மத்திய அரசிடம் கோரியிருப்பதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது,

இதேநேரம் மேற்படி சம்பவம் கடலில் நடைபெறும் போது தப்பி வந்த சில மீனவர்கள் கருத்துத்தெரிவிக்கையில்;

இராமேஸ்வரத்துக்கும்-கச்சதீவுக்குமிடையில் நாம் மீன் பிடித்துக் கொண்டிருக்கையில், அதிகாலை 2- மணியளவில் இரு பாரிய படகுகளில் ஆயுதங்களுடன் வந்த சிலர் வானத்தை நோக்கி பலதடவை துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து விட்டு மீனவர்களையும் படகுகளையும் ஒன்றுடன் ஒன்று இணைத்துக்கொண்டு, மேற்பகுதியை நோக்கி விரைந்து சென்றனர். ஆயுதங்களுடன் வந்தவர்கள், சிங்களத்திலும் தமிழிலும் சரளமாக பேசினார்கள் என்றும் கூறினார்கள்,

பிந்திய செய்தி

இதேவேளை கடத்திச்செல்லப்பட்ட 58மீனவரும்எதுவித பாதிப்புமின்றி நடுக்கடலில் வைத்து கடத்திச் சென்றவர்களால் விடுவிக்கப்பட்டதாகவும் அவர்களது படகுகளும் உடமைகளும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது,

தமிழக சட்டசபை

# எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுமதி மறுப்பு

(சென்னை)

தமிழக எதிர்க்கட்சித்தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்தை சட்டசபையின் எஞ்சிய கூட்டத்தொடர்களுக்கு கலந்து கொள்ள வேண்டாம் என சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தமிழக சட்டப் பேரவையில் நேற்று முன் தினம் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

பலத்த வாதப்பிரதிவாதங்களின்பின் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் சபையை விட்டு வெளிநடப்பு செய்ததோடு இந்திரா காங்கிரஸ் அலுவலகத்தில் கறுப்புதுணி அணிந்ததோடு வீதிகளில் இறங்கி பெரும்ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதேவேளையில் சட்டப்பேரவை உறுப்பினர் அழகிரி அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.

இதனையடுத்து சட்டப் பேரவையில் மீண்டும் குழப்ப நிலை ஏற்பட்டது. க-சி

# அமெரிக்காவில் குண்டுவெடிப்பு 9மாடிக் கட்டிடம் தகர்ந்தது!

## 30 பேர் பலி: 200 பேர் காயம்

[வாஷிங்டன்]

அமெரிக்காவில் ஒக்லகாமா நகரில் அரச கட்டடம் ஒன்றில மிகவும் சக்திவாய்ந்த கார்க் குண்டொன்று வெடித்ததில் 30 பேர் வரை உயிரிழந்ததுடன் 200 பேர் படுகாயமடைந்தனர். 250 பேரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; அமெரிக்க மத்திய அரசுக்கு சொந்தமான 9 மாடிக் கட்டிடத்தின் கீழே கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த மிகவும் சக்தி வாய்ந்த 1000 கிலோ குண்டு வெடித்ததால்கட்டிடம்பலத்த சேதத்திற்கு உள்ளாகி கட்டிட முகப்பு தகர்ந்துவிட்டது.

இக்கட்டிடத்தில் இருந்த அரச அலுவலகங்கள் பலவும் தீப்பற்றின. கட்டிடத்திற்குக் கீழே நிறுத்திவைக்கப்பட்டிருந்த பல கார்கள் தூக்கிவீசப்பட்டதுடன் முற்றாக எரிந்து நாசமாகின. அருகிலிருந்த கட்டிடங்கள், கடைகள் யாவும் எரிந்து நாசமாகின

இந்தக கட்டிடத்தின் அருகிலிருந்த குழந்தைகள் காப்பக மையம் ஒன்றைச் சேர்ந்த குழந்தைகள் 20 பேர் இத் தாக்குதலினால் உயிரிழந்துள்ளனர். இறந்தோர் தொகை 80ற்கும் அதிகமென உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில்நடைபெற்ற மிக மோசமான குண்டுவெடிப்பு இதுவென தெரிவிக்கப்படுகிறது. குண்டு வெடிப்புக்கு சற்று முன் கட்டிடத்தைவிட்டு வெளியேறிய மேற்காசிய நாட்டைச் சேர்ந்த மூவரை பொலிஸார் தேடி வருகின்றனர். குண்டுவெடிப்புக்கு காரணம் யார் எனத தெரியாதபோதும இஸ்லாமிய தீவிரவாதிகளே இதனைச் செய்திருப்பர் என பொலிஸார் நம்புகின்றனர்.

இத்தாக்குதலை அமெரிக்கா சகித்துக்கொள்ளாது எனவும் தீயசக்திகளின் மிரட்டல்களுக்கு அமெரிக்கா அஞ்சாது என அமெரிக்க அதிபர் கிளிங்டன எச்சரித்துள்ளார். -சி

இந்து முன்னணி கட்டிடத்திற்கு

# முஸ்லிம் தீவிரவாதிகளே குண்டு வைத்தனர்

(சென்னை)

சென்னை இந்து முன்னணிக் கட்டிடத்தில் கடந்த வாரம் நடைபெற்ற குண்டுத்தாக்குதலுக்கு முஸ்லிம் தீவிரவாதிகளே காரணமென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த கட்டிடம் தகர்க்கப்பட்டபோது இறந்த நபர் இரகசிய தீவிரவாத அமைப்பான அல்-உமாவை சேர்ந்தவராயிருக்கலாமென பொலிசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

அந்த நபரின் கம்பியூட்டர் புகைப்படம் வெளியிடப்பட்டது. 1993ல் ஆர். எஸ். எஸ். கட்டிட குண்டு வெடிப்பிலும் குற்றம் சாட்டப்பட்டிருந்த ராஜா விஜாமுதீன் என்பவருக்கும் இந்த புகைப்படத்திலிருப்பவருக்கும் தோற்றத்தில் ஒற்றுமை இருப்பதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

இந்து முன்னணி கட்டிடத்தில இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்கு முன் அங்குவந்தவர்களை நேரில் பார்த்தவர்களின் தகவலையடுத்தே மேற்படி கம்பியூட்டர் புகைப்படம் தயாரிக்கப்பட்டதாம். ]சி[

# வீரப்பனை பிடிக்கச் சென்ற எல்லைக்காவல் படை வாபஸ்

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனை கைது செய்வதற்காக நியமிக்கப்பட்ட, விசேட எல்லைக்காவற்படைப் பிரிவை தமிழக அரசு விலக்கிக்கொள்வதாக, காவல் துறை அதிகாரி எஸ். வி. வர்மன் அறிவித்துள்ளார்,

விசேட படைப்பிரிவை விலக்கிக்கொள்வதால், வீரப்பனை தேடிக் கைது செய்யும் நடவடிக்கையை தமிழக அரசு கைவிட்டுவிட்டது என்று யாரும் நினைக்கக் கூடாது. ஜம்முகாஷ்மீர் வடகிழக்கு மாநிலங்களில் தீவிர வாதிகளின் தொல்லைகள் அதிகரித்துவருவதினால் அவற்றை அடக்குவதற்காகவே இந்த விசேட எல்லைக் காவற்படைபிரிவை இங்கிருந்து அகற்றுவதாக காவல் துறை அதிகாரி வர்மன் மேலும் தெரிவித்தார்.

சந்தனமரக்கடத்தல், கள்ளக்கடத்தல் சம்பவங்களிற்காக சிறையிலடைக்கப்பட்ட வீரப்பன் 1986-ம் ஆண்டு சென்னை மத்தியசிறைச்சாலையிலிருந்து தப்பி எல்லைக் காட்டுப்பகுதிகளில் தனது சகாக்களுடன் மறைந்திருந்து

(5ம் பக்கம் பார்க்க)

வேலைவாய்ப்பு திணைக்களத்தில் பதியாதோர்

# வெளிநாட்டுக்குச் செல்ல நேற்று முதல் தடை விதிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல் வெளிநாடுகளில்வேலை பெறச் செல்லும் எவரும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தினுள் பிரவேசிக்கவோ அல்லது வெளிநாடுகளுக்கு செல்லவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்,

இப்புதிய தீர்மானத்தின்படி இம்மாதம் 24ம்திகதி அல்லது அதற்கு முன்னதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு முகவர்கள் இலங்கையரை வேலைவாய்ப்பிற்காக வெளிநாட்டுக் அனுப்ப தகுதியுடையோராயிருப்பர்.

எனவே பதிவு செய்யப்பட்ட முகவர்கள்கூடாக செல்லாத வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்ப்போர் கொழும்பு சர்வதேச விமான நிலையத்துக்குள் பிரவேசிப்பதை தடை செய்யும் விதி உடனடியாக அமுலுக்குவருகிறது, சி

# அரசுக்கான தமது ஆதரவை பல கட்சிகள் விலக்கலாம்

(கொழும்பு)

பொ. ச. மு. அரசில் அங்கம் வகிக்கும் பல கட்சிகள் விரைவில் அக் கூட்டணியிலிருந்து பிரிந்து செல்லும் நிலைமை தோன்றிவருவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்புக்கிடையில் கருத்து வேறுபாடு அதிகரித்து வருவதால் அவர்களிடையேயான கூட்டு முறிந்து விடும் அபாயம் தோன்றியுள்ளது.

இதேபோன்றே இ. தொ. கா தலைவருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்குமிடையில் பிணக்குகள் அதிகரித்து வருகின்றன, அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தன்னையும் தனது கட்சி முன்வைத்துள்ள கோரிக்கைகளையும் ஜனாதிபதி சந்திரிகா உதாசீனம் செய்து வருவதால் அமைச்சர் தொண்டமான் அரசின் மீது அதிருப்தி கொண்டுள்ளார். இ. தொ, கா அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் கூட இறங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது எவ்வேளையிலும் இ. தொ. கா அரசுக்கான தனது ஆதரவை விலக்குவதுடன் அமைச்சர் தொண்டமானும் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யலாமெனவும் செய்திகள் அடிபடுகின்றன.

இதேவேளை ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி (லலித்) பிரிவுத் தலைவியும் அமைச்சருமான திருமதி ஸ்ரீமானி அத்துலத்முதலிக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்குமிடையில் தீவிர கருத்து முரண்பாடு எழுந்துள்ளது. அமைச்சராக இவர் பதவியேற்ற நாள் முதல் இவ்விருவருக்குமிடையில் நிலவும் கருத்து முரண்பாடு பொ. ச. முவுக்கான ஆதரவை ஐ, ஐ. தே. மு. நீக்கும் நிலைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பொ. ச. மு அரசுக்கான ஆதரவை மேற்படி 3 கட்சிகளும் விலக்குமானால் அதன் தலைவர்களான மேற்படி மூவரும் தங்களது அமைச்சர் பதவிகளை இழக்க நேருவதுடன் தமது எதிர்காலத்தையும் இழந்து விடுவார்கள் என்பதால் கருத்து முரண்பாடுகள் பெருமளவில் இருந்தாலும் ஒருவாறு ஒத்துப்போகவே செய்வார்கள் என்றும் கூறப்படுகிறது. -சி

# தண்டுக் கருக்கலினால் வெங்காயம் பாதிப்பு

(மானிப்பாய்)

அச்சுவேலி, புத்தூர், நவக்கிரி பகுதி வயல்களில் பயிரிடப்பட்டுள்ள வெங்காயங்கள் தண்டுக்கருக்கல் என்னும் நோயினால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட இந்நோயினால் வெங்காயத்தின் தண்டுகள் முற்றாக கருகியுள்ளனவாம். இதனால் பெருமளவு ஏக்கரில் இம்முறை வெங்காயச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு பெருமளவில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிது. (71-ரி)

## கிராம அபிவிருத்திக்கு ஜப்பான் நிதியுதவி

(கொழும்புத்துறை)

பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு தமது கிராமங்களிலுள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி கைத்தொழில்களைச் செய்வதற்கும் மற்றும் விவசாயம், கோழி வளர்ப்பு கால்நடைவளர்ப்பு ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் என ஜப்பான் நாட்டிலிருந்து நிதியுதவி கிடைக்கவுள்ளது.

இத்திட்டங்கள் கிராமிய அபிவிருத்திச்சங்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளன[என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம் பெற்ற பளைப்பிரதேசத்திலுள்ள சகல கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் பிரதி நிதிகளுக்கான கலந்துரையாடலில் இந்திட்டங்களை மேற்கொள்ளத் தேவையான விபரங்களைத் திரட்டித் தருமாறு கோரப்பட்டுள்ளது. (154-ரி)

## நாய்களின் தொல்லை

(அரியாலை)

யாழ். நகர்ப் பகுதியில் நாய்களின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது. இரவு நேரங்களில் வீதிகளில் அதிக அளவு கட்டாக்காலி நாய்கள் திரிவதால் மக்கள் அச்சத்துடன் நடமாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக மானிப்பாய் வீதி, கோணன்தோட்டம், அர்ச்சுனா வீதி, இராசாவின் தோட்டம் ஆகியவற்றில் நாய்களின் தொல்லை இரவில் அதிகரித்துள்ளது. -59

# தாக்குதலைச் சாதகமாக்க அரசு தீவிரமாக முயல்கிறது

(கொழும்பு)

விடுதலைப்புலிகள், திருமலையில் கடற்படையினர் மீது மேற்கொண்ட தாக்குதல்களினால் நாட்டின் பல பாகங்களிலும் குழப்பங்கள் ஏற்படலாம் என பலர் அஞ்சிய போதிலும், அவ்வாறு ஏதும் நடைபெறவில்லையென்று பி. பி. ஸி. தெரிவித்தது.

பி, பி. ஸி இது பற்றி மேலும் தெரிவிக்கையில்: மேற்படி சம்பவத்தினால் நாட்டின் எந்தப்பகுதியிலும் குழப்பங்கள் நடைபெறவில்லை: கொழும்பு உட்பட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் அமைதி நிலவுகிறது. கூடுதலான மக்களுக்கு இச் சம்பவம் பற்றி இன்னும் ஏதும் தெரியாமலே இருக்கிறது.

சீனப்பீரங்கிப்படகுகள் இரண்டையும் விடுதலைப்புலிகள் தகர்த்தது பாதுகாப்புபடையினருக்கு ஒரு பெரிய பின்னடைவாக இருந்த போதிலும்- இச்சம்பவத்தை அரசு தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி, விடுதலைப்புலிகள் போர் மோகம் கொண்டவர்கள் என்றும், தமிழ் மக்களின் நலன்களில் அவர்களுக்கு அக்கறை ஏதும் கிடையாது என்றும், தமிழ் மக்களின் நலன்களிலும், சமாதான முயற்சிகளிலிருந்தும் அரசாங்கம் தடம் புரளாமல் இருப்பதாகவும் காட்ட முயல்கிறது. இந்த சம்பவத்தை தனக்கு சாதகமாக மாற்ற முயல்வதாக பி.பி.ஸி, மேலும் தெரிவித்தது. வி சி

## கலை நிகழ்வு

(நெல்லியடி)

வதிரி தமிழ் மன்றமும் மனோகரா கலா நிலையமும் கிராமியக் கலை குழுவினரும் இணைந்து நடாத்தியமாதாந்த கருத்தரங்கும், கலை நிகழ்ச்சியும் அண்மையில் வதிரி டயமன்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது-

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு த. கலாமணியும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. விபுலனும் கலந்து கொண்டனர். (160-ரி)

## நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிட ஏற்பாடு

(கொழும்புத்துறை)

தெல்லிப்பளை பிரதேசச் செயலாளர் பணிமனையில் இன்று 21ம் திகதி வெள்ளிக்கிழமையும், 24ம் திகதி திங்கட்கிழமையும், 25ம் திகதி செவ்வாய்க்கிழமையும் ஆகியமூன்று நாட்களிலும் காலை 8-0 மணி தொடக்கம் பிற்பகல் 2-00 மணி வரையும் நிறுவைகள் அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும்.

இப்பகுதிக்கடை உரிமையாளர்கள், சந்தை வியாபாரிகள் அனைவரும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தத்தமது நிறுவைகள், அளவைகள், கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ். செயலக நிறுவைகள்- அளவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார்,

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முத்திரையிடத்தவறுபவர்கள் மீது திணைக்கள அதிகாரிகள் திடீர்ப்பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டால் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். 154

## வீரப்பனை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தனது கள்ளக்கடத்தல் தொழிலை மிகவும் வெற்றிகரமாக நடாத்தி வருகிறான்

வீரப்பனை கைது செய்வதற்காக தமிழகப் பொலிசார் பல தடவைகள் முயற்சி செய்தும் படுதோல்வி அடைந்ததினால் தமிழக அரசும் இணைந்து மத்திய அரசின் விசேட எல்லைக்காவற்படைப் பிரிவின் உதவியுடன் வீரப்பனை கைது செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக இப்படைப்பிரிவு வீரப்பனை கைதுசெய்வதற்கு எடுத்த பாரிய தேடுதல்கள் அனைத்தையும் வீரப்பன் முறியடித்ததுடன், இப்பிரிவைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட வீரர்களை படுகொலையும் செய்தான். வீரப்பனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துத்தருபவர்களுக்கு 6 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்றும் தமிழக அரசு அறிவித்திருந்தது.

இப்படிப்பட்ட ஒரு பயங்கரக்குற்றவாளியை கைது செய்வதை விடுத்து எல்லைக் காவல்படையை விலக்கிக் கொள்வதாக அரசு எடுத்த முடிவு பொதுமக்களுக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக பி. பி ஸி. தெரிவித்தது. வி. சி

# மீனவர் மீது கடற்படை சூடு

[நெல்லியடி)

மீன்பிடிக்கச் சென்ற மீனவர் மீது கடற்படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் எனினும் மீனவர்கள் உடமைகளை கைவிட்டு, உயிர்தப்பி கரைசேர்ந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 5.00 மணியளவில் வடமராட்சி கடற்பரப்பான வல்வெட்டித் துறைக் கடலில் நிகழ்ந்தது.

உடமைகளை இழந்த மீனவர் சில மணி நேரத்தின் பின்னர் அங்கிருந்து உடமைகளை மீட்டெடுத்தனர். 195-சி

# பட்டதாரிகளுக்கு சமுத்தி முகாமையாளர் பதவி

[மானிப்பாய்]

அரச திணைக்களங்களில் எழுதுவினைஞர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு சமுத்தி திட்டத்தின் கீழ் சமுத்தி முகாமையாளர் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

தற்போது அமைய அடிப்படையில் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட இவர்களுக்கு எதிர்வரும் ஜூலை மாதம் முதல் நிரந்தர நியமனத்துடன் மேற்படி முகாமையாளர் பதவிகள் வழங்கப்படவுள்ளன. ]71-ரி]


## சம்பள ஆளணித் தனிநபர் ஆணைக்குழு

யாழ். மாவட்ட பிரதேச செயலாளர்கள் உட்பட சகல உள்ளூர்த் திணைக்களத் தலைவர்களையும், அரச கூட்டுத்தாபன அதிகார சபைகளின் தலைவர்களையும் எதிர்வரும் சனிக்கிழமை 22 - 04 - 95 அன்று தங்களது அலுவலகங்களின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி, வெற்றிடங்கள், மேலதிகம் போன்ற விபரங்களுடன் சம்பள ஆளணிச் சபையால் நியமிக்கப்பட்ட தனிநபர் விசாரணைக்குழு திரு கே. சீ லோகேஸ்வரன் அவர்களை எனது செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9-00 மணிக்குத் தவறாது சந்திக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்கிறேன்.

க. பொன்னம்பலம்,
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(ஏ-4887)



தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தொழிலாளர் தினத்தை
முன்னிட்டு நடாத்தும்

## உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகள்

மாபெரும்
மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இடம் :
நீர்வேலி சவாரித் திடல்

காலம் :
22 - 04 - 1995 சனிக்கிழமை
பிற்பகல் 02-30 மணி

★ போட்டிகள் ஏ. பீ. சீ. என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

கைக்கொடிச் சவாரியும் இடம் பெறும்.

★ அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(ஏ-4886)

க. பொ. த. (சா/த) பரீட்சை:

# பெறுபேறுகள் மீளாய்வு

## 5ம்திகதிக்கு முன்விண்ணப்பிக்கவும்

[கொழும்பு]

1994ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரபரீட்சைக்கான பெறுபேறுகளை மீளாய்வுசெய்யவிரும்பும் பரீட்சார்த்திகள் மே மாதம் 5ம் திகதிக்கு முன்னர் அதற்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை ஆணையாளர் நாயகம் மீளாய்வுக்கிளை இலங்கை பரீட்சை திணைக்களம் மலே வீதி, கொழும்பு-2 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என பரீட்சை திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபர்கள் மூலமாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[க-இ]

## ஆசிரியர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் தெற்காசிய இளைஞர் நட்புறவு நிகழ்ச்சித திட்டத்தில் பற்கு பறறத் தகுதியுடைய அரசாங்க பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரபபட்டிருந்தது. விண்ணப்ப முடிவுதிகதி இம்மாதம் 24ம திகதயாகும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்ற விண்ணப்பித்தவர்களுக்கு எதிர்வரும் 27ம் திகதி திருகோணமலை மாகாணக் கல்விப் பணிமனையில் நேர்முகப்பரீட்சை நடைபெற உள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு கடிதம் கிடைக்காதவர்கள் விண்ணப்பப் பிரதியுடனும் பதிவுத்தபால் பற்றுச்சீட்டுடனும் நேர்முகப் பரீட்சைக்கு பிரசன்னமாகும்படி மாகாணக் கல்விப்பணிப்பாளர் அறிவித்தள்ளார். மேலதிக விபரங்களை யாழ். வயலம் 1, கல்விப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாமென அறிவித்துள்ளார்.

இ

## திருமலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி[

துவுந்த (கனேமுல்ல), எச். ஏ. ஈ எஸ் பிரசந்த (ஹ மன) தீர் மசேன (வியாங்கொடை), ஏ. குலவன்ஸ ஆகியோராவர்.

மேலும் பொறியியலாளரான தணிசசூரிய, மின்சார டமுதுபார்ப்பவர் கே. கே பி. ஏ. குலவன்ஸ, ஈ. எஸ். கே. விஜேந்திர ஆகிய நால்வரையும் காணவில்லையென்றும் கடற்படை தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

க இ

## நரோமா பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நேற்று 20ம் திகதி நரோமா கப்பலில் பயணம் செய்வதற்கு ஆசனத்தை பதிவுசெய்தவர்கள் இன்று 21ம் திகதி காலை 8 மணிக்கு முன்னர் பருத்தித்துறை துறைமுகத்திற்கு தவறுது சமூகமளிக்கும்படி யாழ்' அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். இ

0 0 0

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மேதாதம் 5ம் திகதி (மே முதற்கிழமை) நரோமா கபபலில் செல்வதற்கு விண்ணப்பித்தவர்கள் இன்று 21 ம் திகதி யாழ். செயலகத்திற்கு வந்து ஆசனத்திற்கான பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ் செயலகம் அறிவித்துள்னது.

எதிர்வரும் 25 ம் திகதி பயணம் செய்வதற்கு பதிவு செய்த விண்ணப்ப தாரிகளில் இதுவரை பணம் செலுத்தி பற்றுச்சீட்டை பெறுதவர்கள் இன்றே (21 ம் திகதி) செயலகத்தில் பணத்தைச் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இ

## சமாதானப்பேச்சு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அவர்களுக்கு கடிதம் ஒன்றை விரைவில் அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இதேநேரம் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு யாழ். நகருக்கு அரசப் பிரதிநிதிகளை அனுப்புவதில்லையென்றும் மேற்படிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகவும் 'ஒப்ஸ்சேவர் தெரிவித்துள்ளது.

-வி-இ

## யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் இணையம் விடுக்கும்

# முக்கிய அறிவித்தல்

இன்றைய போர்க்கால' சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களை தமக்கு சாதகமாக பயன்படுத்தி சில வர்த்தகர்கள் பொறுப்பற்ற விதத்தில் பொருட்களின் விலையை மோசமாக உயர்த்தி கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர். தமிழீழ மக்கள் எச்சுமையையும் தாங்கி வீறுகொண்டு போராட்டத்தை நடாத்தும் வேளையில் இவ்வாறான செயலானது அவர்களின் வாழ்க்கை சுமையை மேலும் அதிகரிப்பதாக உள்ளது எனவே எமது மக்களினதும் நமது தேசத்தினதும நலனை கருத்தில்கொண்டு பொறுப்புடன் செயற்பட்டு பதுக்கலை தவிர்த்து நியாயமான விலைக்கு விற்குமாறு இணையத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நன்றி

செயலாளர்

யாழ் மாவட்ட வணிகர்

கழகங்களின் இணையம்

[எ-1463[

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B,1633613,

## அரசு-புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சையில், அமைதி நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து செயற்படவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

க இ

## மீனவர்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவு நேரம் மேற்படி பகுதிகளில் இருந்தும் இராணுவத்தினர் திடீரென்று எமது தலைகளுக்கு மேலால் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து எம்மை நோக்கி கற்களாலும் தாக்கினார்கள். 'இனிமேல் இப்பகுதிகளுக்கு மீன் பிடிக்க வரக்கூடாது' என்று கூறியபடிபடி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தார்கள்.

நாம் மிகவும் அச்சத்துடன் எமது படகுகளையும் மீன்பிடி சாதனங்களையும் எடுத்துக் கொண்டு கரைக்கு வந்துவிட்டோம். எமமில் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று கூறினார். வி-இ

## சமாதான நம்பிக்கை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விதத்தில் விடுதலைப்புலிகள் முதலாவது தாக்குதலாக தெளிவான இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் ஸ்ரீலங்கா அரசாங்கம சாதகமான நேர் தன்மையுள்ள முடிவுகளை நகர்வுகளை மேற்கொண்டால் போர் பற்றிய நம்பக தன்மைக்கு பதிலாக சமாதானம் பற்றிய நம்பிக்கை உருவாக இடமிருக்கிறது என்றார்.

-க-இ

## பெண் கடற்புலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுன்னாகம் பொதுச் சந்தை மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும். இறுதி வீரவணக்கக்கூட்டம் நிறைவுற ஊர்திபவனியாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செலலப்பட்டு இறுதி இராணுவ மரியாதையுடன் நினைவுககல் நாட்டப்படும்.

## தமது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடவில்லை என பி பி ஸி தெரிவித்தது.

இதேவேளை அரசுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் விடுதலைப் புலிகளை ஈடுபடுத்துவதற்கு எவ்வாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளலாமென வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆலோசனை மேற்கொண்டு வருவதாகவும் பி. பி. சி. தெரிவித்தது.

இதுபற்றி பி பி.ஸி. மேலும் தெரிவிகலையில்: அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் செப்பனிட முடியாதபடி பாழடைந்துவிட்டது என்று கொழும்பிலுள்ள வெளிநாட்டுத தூதரக அதிகாரிகள் கருதவில்லை எனவும் தெரிவித்தது.

வி இ

## பலாலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூவர் காயமடைந்ததாகவும் இலங்கை இராணுவதலைமைச் செயலகம் அறிவித்ததாக இந்திய வானொலி நேற்று தெரிவித்தது.

மேற்படி வானொலி இது பற்றி மேலும் தெரிவிக்கையில்:

நேற்று அதிகாலை பலாலி இராணுவ முகாம்மீது விடுதலைப்புலிகள் ரொக்கெட்டுகளாலும் மோட்டார் குண்டுகளாலும் தாக்குதல்கள் நடாத்தியதாகவும் இத்தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியானதாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டதாக இந்திய வானொலி தெரிவித்தது.

மேற்படி செய்தியை வெரித்தாஸ், சிங்கப்பூர் வானொலிகளும் நேற்று ஊர்ஜிதம் செய்தன.

-வி-இ

# இலங்கைக்கு 70 கோடி அமெ. டொலர் உதவி

[கொழும்பு]

இலங்கைக்கு 70 கோடி அமெரிக்க டொலர்கள்கிடைக்கக்கூடுமென உலக வங்கியின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: அடுத்த வாரமளவில் பாரிஸில் நடைபெறும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இவ் உதவிகள் வழங்க சிபார்சு செய்யப்படக்கூடும்.

மூன்று வருடங்களுக்குள் மேலும் 200 கோடி டொலர்கள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளது எனினும் இனப்பிரச்னைக்கான சமாதான முயற்சிகள் வெற்றிபெற்றால் இவ் உதவிகள் மேலும் அதிகரிக்கப்படலாம் என்றும் அவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளார். க இ

# இலங்கை கடற்படை பலமின்றி இருக்கிறது

## இராணுவ ஆய்வாளர் கருத்து

(கொழும்பு)

இலங்கை கடற்படை பலமில்லாமல் இருப்பதனாலேயே விடுதலைப் புலிகள் தொடர்ந்து கடற்படை மீது தாக்குதல்களை நடாத்தி வருவதாக இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் கடற்படையின் பலவீனத்தை விடுதலைப் புலிகள் நன்கு அறிந்துள்ளமையினாலேயே இவர்கள் மீது விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறார்கள் என்று ஆய்வாளர்கள் மேலும் நெரிவித்தனர்.

வி-இ

# நான்கு மீனவரை காணவில்லை

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு தாளையடி கரையிலிருந்து நேற்று முன்தினம் மாலை கடற்றொழிலுக்குச் சென்ற இரண்டு படகுகளும் அதில் சென்ற நான்கு மீனவர்களும் நேற்று பகல் வரை கரை திரும்பவில்லை.

இன்று அதிகாலை இப்பகுதி கடற்பரப்பில் கடற்படையினரின் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதைத் தொடர்ந்து கடலில் பாரிய வெளிச்சம் தெரிந்ததாகவும் கரையில் நின்ற மக்கள் தெரிவித்தனர்.

இ-163

# மாவீரர் திருவுருவப் படங்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

திருமலை துறைமுகத்தினுள் புகுந்து சிறிலங்கா கடற்படையின் அதிவேக பீரங்கிக் கப்பலாகிய 'சூரயா' வையும் 'ரணசுறு' வையும் ஒன்றன்பின் ஒன்றாக கரும்புலித் தாக்குதலின் மூலம் தகர்த்தெறிந்த சுலோசன் விசேட நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த கடற்கரும்புலி மேஜர் கதிரவன் (பரந்தன்), கடற்கரும்புலி தணிகை மாறன்- குயிக் மாறன், பெண் கடற்கரும்புலிகளான அங்கயற் கண்ணி. விசேட நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த கடற்கரும்புலி மேஜர் மதுசா, கடற்கரும்புலி கப்டன் சாந்தா ஆகிய நான்கு கடற் கரும்புலிகளுக்கும் இறுதி வீர வணக்கம் செலுத்தி மரியாதையைச் செலுத்து முகமாக யாழ். மாவட்டத்தின் சகல வீதிகளிலும், முக்கிய இடங்களிலும், சிவப்பு. மஞ்சள், கறுப்பு கொடிகளினாலும் அலங்கரித்து அவர்களின திருவுருவப் படங்களைப் பந்தலிலிட்டு, விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவோம் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாவீரர்களின் திருவுருவப் படங்கள் தாங்கிய ஊர்திகள் கோட்ட ரீதியாக 22ம், 23ம் திகதிகளில் பவனிவரும் வேளையில் வீதிகள் தோறும் விளக்கேற்றி மலர் வைத்து, இம் மாவீரர்களிற்கு அஞ்சலி செலுத்தி எம் மண்ணின் விடிவிற்காக தமது உயிரையே வெடிகுண்டாக்கி எதிரியின் கடற்கலங்களையே உடைத்து மீண்டும் ஓர் வரலாறு படைத்த காவிய நாயகர்களின் தியாகத்தை உலகிற்கு எடுத்தியம்புவோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீன்பிடிப்பதற்கு முற்றாகத் தடை

]கொழும்பு)

வடக்கு கிழக்கு கடற்கரைப் பிரதேசத்தில மீன்பிடிப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டதாக அரசு நேற்று அறிவித்தது.

பாதுகாப்பு அமைச்சு இதனை அறிவிக்கும் விதமாக நேற்று விசேஷ வர்த்தமானி அறிவித்தல் ஒன்றையும் விடுத்தது

மீனவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தசலுகைகள் யாவும் இவ் அறிவித்தல்மூலம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசு மேலும் தெரிவித்தது.

இந்த அறிவுறுத்தல்படி நடந்துகொள்ளுமாறுவடக்கு, கிழக்குப் பகுதி மீனவர்களுக்கு அரசு வலியுறுத்தியுள்ளது.

-இ

## மூன்றும் கட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமாதான முயற்சிகள் இனி மேலும் தொடரும் சாத்தியங்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நேற்று முன்தினம் உயர்மட்ட மாநாடு ஒன்றில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

-க